TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XI.] **FEBRUARY, 1911-௵ பெப்ருவரி௴.** [இலக்கம் 1.

ஜீவ ஹிம்ச நிவாரண இராஜ சங்கம்.

இங்கிலாந்து தேசத்தில் 1822-ம் வருஷத்தில் ஏற்பட்ட "ஜந்துக்களின் ஹிம்சைகளைத் தடுக்கும் சட்டம்" என்கிற சட்டம் ஏற்பாடாவதற்குமுன் வாயில்லாப் பிராணிகளும் பட்சமுடன் கவனிக்கப்பட வேண்டுமென்கிற எண்ணம் ஜனங்களுக்குத் தோன்றாமலே யிருந்தது. அவைகள் மனிதருடைய சுகத்தின்பொருட்டுச் சிருஷ்டிக்கப்பட்டவை யென்றும், ஆதலால் அவைகளைத் தம்மிஷ்டம்போல் நடத்தலாமென்றும் ஜனங்கள் நினைத்து அவைகளைப் பலவாறு ஹிம்சித்து வந்தார்கள். வாயில்லாப் பிராணிகளிடத்தி லிரக்கமுள்ளவர்கள் யாராவது அவைகளை ஹிம்சிக்கக் கூடாதென்று சொல்வார்களேயானால், ஜனங்கள் அவர்களைப் பரிகாசஞ் செய்வதும் கோபிப்பதுமா யிருந்தார்கள். இதற் குதாரணமாக, 1809-ம் வருஷத்தில் லார்ட் எர்ஸ்கைன் (Lord Erskine) என்னும் பிரபு வாயில்லாப் பிராணிகளின் நிலைமையை யெடுத்துக்காட்டி, அவைகளின் பாதுகாப்பின்பொருட்டு ஏதாவது சட்டமேற்படுத்தவேண்டுமென்று பார்லிமெண்டில் பேசினபோது அச்சபையி லிருந்தவர்களி லநேகர் அவரை ஏளனஞ் செய்தார்களாம். இதைக் கண்ட சாமானிய ஜனங்களும் மிருகங்களைப்பற்றி உபேக்ஷை யுள்ளவர்களாய் வீதிகளிலும் இன்னு மிதர விடங்களிலும் நடக்கிற குரூரமான காரியங்களை யறிந்தும் அவைகளை நிறுத்த யாதொரு முயற்சியும் செய்யாமலே யிருந்துவிட்டார்கள். ஆனபோதிலும், மிருகங்களின் கவலை சில மிருகாபிமானிகளின் மனதை விட்டுப் போகவேயில்லை. அப்படிப்பட்ட புண்ணியாத்மாக்கள் ஒன்றுசேர்ந்து 1824-ம் வருஷத்தில் லண்டன் மகா நகரத்தில் 'ஜீவ ஹிம்ச நிவாரண சங்கம்' என்றோர் சங்கம் ஸ்தாபித்து, பிராணிகளினிடத்தில் அன்பு பாராட்ட வேண்டுமென்னும் விஷயத்தைப் பற்றிப் பல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் அச்சிட்டு, அவைகளைப் பள்ளிக்கூடங்களிலும் வண்டிக்காரர் முதலிய தாழ்ந்த ஜனங்களுக்கும் இனாமாகக் கொடுப்பது, பாதிரிமார்களைக் கோயில்களில் ஜீவகாருண்யத்தைப்பற்றி அடிக்கடி உபந்நியசிக்கும்படித் தூண்டுவது முதலிய சத்காரியங்களைச் செய்ய வாரம்பித்தார்கள். சாதாரண ஜனங்களுக்கு நல்ல விஷயங்களை நயத்தினால் மாத்திர மில்லாமல் பயமார்க்கத்தினாலும் போதிக்கவேண்டிய தவசியமா யிருக்கிறதென்று அறிந்து, அச்சங்கத்தார் உத்தியோகஸ்தர்களை நியமித்து, குதிரை எருது முதலிய ஜந்துக்களை ஹிம்சிப்பவர்களைத் தண்டனைக் குட்படுத்தியும் வந்தார்கள். இவ்விஷயத்தில் அச்சங்கத்தாருக் காதியி லதிக கஷ்டமாயிருந்தது. ஏனென்றால், அக்காலத்தில் ஹிம்சை யென்பது இன்னது என்று வரையறுத்துக் குற்றவாளிகள் தண்டிக்கப்படும்படியான குற்றஞ் செய்ததாக மாஜிஸ்திரேட்டுகளின் முன்னிலையில் ரூபிப்பது கஷ்டமாயிருந்தது. இதனால் அச்சங்கத்தாரை யநேகர் நிந்தித்தும் வந்தார்களாம்.

ஆயினும், அந்த மிருகாபிமானிகள் அக்கஷ்டங்களையும், நிந்தனைகளையும் பொறுத்துக்கொண்டு, ஊக்கஞ் சிறிதுங் குறையாமல் உழைத்துவந்ததினால் வரவரப் புதுச் சட்டங்கள் ஏற்பட்டு, இப்பொழுது சங்கத்தின் காரியங்கள் அவ்வளவு கஷ்டமில்லாமல் நடந்துவருகின்றன.

இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்துவந்த சங்கத்தினிடத்தில் அபிமான முண்டாகி, உலகமாதாவாயிருந்த மகிமைபொருந்தின விக்டோரியா மஹாராணியவர்கள் அச்சங்கத்தின் பரிபாலினியாகவிருக்கச் சம்மதித்தார்கள். பிறகு அம்மஹாராணியவர்களின் அனுமதியின்பேரில் அச்சங்கம் "இராஜா" என்னும் அடைமொழியைப் பெற்று அப்போதிலிருந்து "ஜீவ ஹிம்ச நிவாரண இராஜ சங்கம்" என்னும் பெயர் வகித்து வருகிறது. அதுமுதல் அச்சங்கத்தாரை யாரும் பரிகாசஞ் செய்கிறதில்லை. அச்சங்கத்தின் முயற்சியினால், எருதுச்சண்டை, கோழிச்சண்டை முதலிய அநாகரீகமான விளையாட்டுகள் தண்டனைக் குட்படுத்தப்பட் டிருக்கின்றன.

இந்தச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் மூலமாக வருஷத்தில் 7,000 ஜனங்கள் ஜீவஹிம்சை செய்ததற்காகத் தண்டனைக் குட்படுத்தப்படுகிறார்கள். ஆயினும், அநேகர் குருட்டு மிருகங்களையும் காயப்பட்ட மிருகங்களையும் இராக்காலங்களிலும் ஆவரண ஸ்தலங்களிலும் வேலைசெய்யும்படி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைத் தண்டனைக் குட்படுத்துவது கஷ்டம். ஆதலால், அவர்களுக்கு ஜீவகாருண்யத்தைப் பற்றிச் சமயோசிதமாக நயத்தினாலும் பயத்தினாலும் போதிக்கவேண்டும்.

வேலைக்காரர்கள் அவர்களிடத்தி லொப்புவிக்கப்படுகிற பிராணிகளை யடிக்கும்போது அவர்களைக் கோபிப்பதுமட்டும் போதாது. அவர்களுடைய கெட்ட நடத்தையினாலும் இன்னும் பலவித அஜாக்கிரதையினாலும் அந்த ஜந்துக்களுக் குண்டாகுந் துன்பத்தையும் சுகக்குறைவையும் அவர்களுக் கெடுத்துக்காட்டி அவ்வாறு செய்வது பாவச்செயல்களென்று அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

அச்சங்கத்தின்வேலைகளைச் சரிவரப்பார்த்துவர ஓர் ஆலோசனைச் சங்கமும், வித்தியா விஷயமான காரியங்களி லுதவிபுரிய ஸ்திரீகளின் கூட்டமொன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்துரைசானிகள் வாயில்லாப் பிராணிகளை அன்புடன் நடத்தவேண்டுமென்னும் விஷயத்தைப்பற்றிச் சிறு பத்திரிகைகள் அச்சிட்டு, அவைகளைப் பள்ளிக்கூடங்கள், கிராமபுஸ்தகச்சாலைகள், சாராயக்கடைகள், ரெயில்வே ஸ்டேஷன்கள், வைத்தியசாலைகள், கூலிவேலைச் சாலைகள், சிறைச்சாலைகள் முதலிய விடங்களுக்கு விலை வாங்காமல் அனுப்புகிறார்கள். இன்னும் சிறுவரும் சிறுமியரும் விளையாட்டுத்தனமாய்ச் சிறு பிராணிகளுக்குச் செய்கிற சிறிய துன்பங்களைச் செய்யக்கூடாதென்று அவர்களுக்குப் போதிக்கும்பொருட்டு "தயா சங்கம்" (Band of Mercy) என்னுமொரு சங்கமேற்படுத்தி யிருக்கிறார்கள். அதிற் சேர்ந்த சிறுவர்கள் மாதத்துக் கொருமுறை ஓரிடத்திற் கூடி ஜந்துக்கள் மனிதர்களிடத்தி லடையவேண்டிய நன்மைகளைப்பற்றிப் பாடங்கேட்டுச் செல்கிறார்கள்.

இவ்வாறு மேற் கூறப்பட்ட பலவிதமான வழிகளில் அந்த இராஜ சங்கத்தார் உழைத்துவருவதுபோலவே, உலகத்தில் இதர தேசங்களிலுள்ள காருண்ய சீலர்கள் எல்லோரும் அதைப்போன்ற சங்கங்களிற் சேர்ந்து அவர்களின் திரவியத்திலும் காலத்திலும் ஒருசிறு பகுதியை இந்தச் சத்காரியத்துக்காக உபயோகித்து வருவார்களாயின், மனிதருக்குத் தாழ்வாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் அளவிடமுடியாத நன்மை யுண்டாகுமென்பது திண்ணம்.

உயர்வு தாழ்வுகளைக் கவனியாமல் எல்லா சிருஷ்டிப் பொருள்களிடத்திலும் ஒரேவிதமான அன்பு பாராட்டுகிறவனே உண்மையான பக்த னென்பார்கள்.

ஜான் கோலம் துரையின் மரணம்.

லண்டன் மகா நகரத்தி லிருக்கிற ஜீவஹிம்ச நிவாரண இராஜ சங்கத்துக்கு நாற்பத்தைந்து வருஷகாலம் காரியதரிசியாயிருந்த மிஸ்டர் ஜான் கோலம் துரையவர்கள், கடந்த மேமீ 25உயில் தெய்வகதி யடைந்த சங்கதி நம்முடைய சங்கத்து நேயர்க ளநேகருக்குத் தெரிந்திருக்கலாம். கோலம் துரையவர்கள் அந்தச் சங்கத்துக்காரியதரிசியாய் நியமிக்கப்

பட்டு, 1860–ம் வருஷத்தில் அது இருந்த கேவல ஸ்திதியையும் அதன் அபிவிருத்திக்குத் தடையாயிருந்த பலவித இடையூறுகளையும் கவனித்துப் பார்த்தவர்கள், அது இப்பொழுது வகித்திருக்கும் மேன்மையையும் உலக முழுவதிலு மதற்குள்ள செல்வாக்கையும் அடையுமென்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். அக்காலத்தி லச்சங்கத்தின் வேலைகளெல்லாம் லண்டன் நகரத்தில்மட்டுந்தான் நடந்தேறிவந்தன. அப்பொழுது அதற்கிருந்த சொல்ப வருவாயைக் கொண்டு ஐந்து இன்ஸ்பெக்டர்களை நியமித்து வேலைபார்த்து வந்தார்கள். இப்பொழுது இங்கிலாந்தி லதற்கு 580 உப சங்கங்கள் ஏற்பட்டு, வருஷத்துக்கு 60,000 பவுன் வருவாயு மிருக்கின்றதென்னும் விஷயமொன்றே கோலம் துரையவர்களின் சாமர்த்தியத்திற்கும், ஊக்கத்திற்கும், ஒப்பில்லாத உழைப்புக்கும் அறிகுறியாயிருக்கிறது. அக்காலத்தில் ஜீவ ஹிம்சை செய்பவர்களைத் தண்டனைக் குட்படுத்துவதற்குச் சரியான சட்டங்க ளில்லாமையால் வருஷத்தில் 500 கேஸுகள் பிடிப்பதுகூட அசாத்தியமாயிருந்தது. கோலம் துரையவர்க ளிவ்விஷயத்தில் அதிகப் பிரயாசை யெடுத்துக்கொண்டதினால் அவர் காரியதரிசியா யிருந்தகாலத்தில் அநேக சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவர் காரியதரிசி வேலையினின்றும் விலகின 1905–ம் வருஷத்தில் ஏறக்குறைய 8,000 பெயர்வழிகள் ஜீவ ஹிம்சை செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு உபசங்கங்கள் ஸ்தாபிப்பதிலும் சட்டங்க ளேற்படுத்துவதிலுமாத்திரம் அவர் காலத்தைச் செலவழிக்கவில்லை. வாயில்லாப் பிராணிகளிடத்தில் அன்புபாராட்டவேண்டு மென்பதைப் பலவிடங்களி லுள்ளவர்களுக்கும் போதிப்பிக்கும்பொருட்டு "ஜந்து பிரபஞ்சம்" என்னும் பத்திரிகையை 1869–ம் வருஷமுதல் பிரசுரஞ் செய்துவந்தார். இது தவிர, பிராணிகளைப்பற்றி நல்ல வியாசங்களை யெழுதி யனுப்புகிறவர்களுக்கு வெகுமதிக ளளித்துவந்தார். இன்னும் அவைகளின் நன்மையின்பொருட்டு இவர் செய்த காரியங்களையெல்லா மெடுத்துரைக்க நம்முடைய பத்திரிகையில் இடமில்லை. இங்கிலாந்தில் அநேக வருஷங்களாக நடந்துகொண்டுவந்த கொடிய வழக்கங்களில் பெரும்பான்மையை அவர் நிறுத்திவிட்டார். அவைகளில் முக்கியமானவை கோழிச்சண்டை, எருதுச்சண்டை, முயலோட்டம் முதலியன. எருதுச்சண்டை செய்வதில் பேர்போன ஒரு ஸ்பானிஷ் ஆட்டக்காரக் கம்பெனியார், 1870–ம் வருஷம் மார்ச்சுமீ 28உ லண்டனில் ஒரு விமரிசையான ஆட்டம் ஆடினார்கள். அந்த ஆட்டத்தின் நடுவில் ஒரு ஆட்டக்காரனுடைய அம்பு ஒரு எருதின் முகத்தில் பலமாய்ப்போ யழுந்தவே அது உடனே கீழே விழுந்தது. அந்தக் கொடிய தொழிலைப் பார்த்துக்கொண்டிருந்த ஜான் கோலம் துரை யுடனே சில போலீஸ் உத்தியோகஸ்தர்களுடன் சென்று ஆட்டரங்கத்திற் பிரவேசித்து, இனி ஆட்டத்தைநிறுத்தவேண்டுமென்றுசொல்லி, அந்த அம்பைக் கையி லெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். ஆட்டம் நிறுத்தப்பட்டதினால் ஜனங்களுக்கு அதிக கோபமுண்டாகி, அவர்கள் கோலம் துரையின்மேல் விழுந்து அவரை யடித்துக் காயப்படுத்தினார்களாம். அக்காயங்கள் ஆறுவதற்கு வெகு நாள் பிடித்ததாம். அதுவரையில் அவர் படுத்த படுக்கையா யிருக்கும்படி நேரிட்டதாம். பிறகு அந்தக் கம்பெனியார் ஜீவ ஹிம்சை செய்த குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டார்களாம்.

அவருக்கு வயதாகி சங்கத்தின் காரியங்களைக் கவனிக்கச்சக்தி குறையவே, 1905–ம் வருஷத்தில் காரியதரிசி வேலையை விட்டுவிட்டார். அப்பொழுது சங்கத்தாரெல்லாரும் சேர்ந்து அவருடைய நிகரில்லாத நற்காரியங்களை அங்கீகரித்து அவருக்கு அநேக வந்தனமளித்து வாழ்த்தினார்கள்.

அதன்பின் ஐந்து வருஷம் கிராய்டன் என்னுமூரில் வசித்திருந்து சென்ற மேமீ காலஞ்செய்தார். அவ ரிறக்கும்பொழுது அவருக்கு வயது 83.

"தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை."

ஓர் நாய் சொல்லிய தன் வாழ்வு

"ஜனன மரண மென்கிற உபாதிகளுக்கு நானும் பாத்திரனாகி அநேக நாய்களைப்போலவே இப்பூமியில் வந்து பிறந்தேன். நான்

பிறந்த ஊர் ஈடன் (Eton) என்னும் பட்டணம். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமே. வெகு நாள்வரையில் என் கண்கள் மூடப்பட்டிருந்ததினால் இரவென்றும் பகலென்றும் ஒன்றுந் தெரியாமலே யிருந்தேன். ஒரு நாள் என் கண்களி லொருமாதிரி யிழுப்புண்டாகி வலிக்க ஆரம்பித்தன. அவைகளைச் சொறியும்பொருட்டு என் கால்களைத் தூக்கினேன். உடனே என்னுடைய கண்கள் திறக்கப்பட்டு நான் பார்க்கலானேன். என்னைப்போலிருந்த மற்றொரு ஐந்து எனக்கெதிரில் வந்து நின்று என்னை உற்றுப்பார்த்தது. அவ்வாறு அது பார்ப்பதைக் கண்டு எனக்குக் கோபமுண்டாகி குரைத்துக்கொண்டு அதன்மேற் பாய்ந்தேன். அருகிலிருந்த ஒரு சிறுவன் "சபாஷ்! நீ வீரியமுள்ள நாய்" என்று சொல்லி என்னைத் தட்டிக்கொடுத்தான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த என் தாயார் எங்களைப் பார்த்து "என் அருமைக் குழந்தைகளே! அமைதியாயிருங்கள். கடிக்கிறதும் உறுமுகிறதும் கெட்ட பழக்கமுள்ள நாய்களின் இலக்ஷணம்" என்று எங்களுக்குப் புத்தி கூறினாள். இப்படி விளையாட்டிலும் வேடிக்கையிலும் நாங்கள் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தோம். ஒருநாள் எங்கள் எஜமானன் எங்களைத் தன்னுடைய சிநேகிதர்கள் சிலருக்குக் காட்டும்பொருட்டு அவர்களை யழைத்துவந்திருந்தார். அவர்களில் ஒருவர் என்பேரில் இஷ்டப்பட்டு என்னைத் தமக்குக் கொடுத்துவிடும்படி கேட்க, என் எஜமானனும் கொடுக்கச் சம்மதித்தார். இரண்டு மூன்று நாளானபிறகு என் கழுத்தி லொரு பட்டையைக் கட்டி என்னை ரெயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று அங்கோர் இருண்ட பெட்டியில் அடைத்துப் பூட்டி விட்டார்கள். அப்பொழுது எனக்கு அதிக பயமும் விசனமு முண்டாயின. பிறகு என்னுடைய புது எஜமானராகிய நாசில் என்னும் துரையினிடத்தில் பத்திரமாய்க் கொண்டு சேர்க்கப்பட்டேன். அவர் வாத்தியப்பெட்டியை வாசிக்கும்பொழுது ஆனந்தத்தினால் பாவசமடைந்து நானும் பாடுவது மாடுவதுமா யிருப்பேன். அவ ரெனக்கு புருஸ் என்று பெயரிட்டார்.

அவர் வாரத்துக் கொருதரம் தன்னுடைய சிநேகிதர்களுடன் ஏகாந்தமாய்ச் சம்பாஷிக்கும்பொருட்டு, அவருடைய தோட்டத்துக்குப் போவது வழக்கம். அந்த சந்தர்ப்பங்களி லவரென்னைக் கூட்டிக்கொண்டு போகிறதில்லை. ஆயினும், நான் அவருக்குத் தெரியாமல் வேலிவழியாய்ச் சென்று தோட்டத்தின் வெளியில் காத்துக்கொண்டிருந்து அவர் வீட்டுக்குத் திரும்பும்போது அவருடன் கூட வருவேன். அப்பொழுது அவர் எனக்குச் சில நயமான சொற்களைச் சொல்லுவார்.

அவருடைய ப்ரையர் என்னுங் குதிரையும்நானும் அதி சிநேகிதர்க ளாய்விட்டோம். எங்கள் எஜமானன் சவாரிபோகச் சித்தப்படுஞ் சமயங்களில் நானும் அக்குதிரையும், அவர் அதன்மே லேறுகிறபரியந்தம் விளையாடிக்கொண்டிருப்போம்.

அவருடைய சிநேகிதர்களெல்லாரும் என்னுடைய ரூபத்தையும் என் புத்திக்கூர்மையையும்பற்றி ஆச்சரியப்படுவார்கள். இப்படியிருக்கையி லொருநாள், என் எஜமானனைப் பார்க்கவந்த நண்பர்களி லொருவரைப் பார்த்து என் எஜமானன் "உபாத்தியாயினியே! என்னுடைய புருஸினிடத்தில் உனக்கு விருப்பமிருந்தால் அதை யுமக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இங்கிலாந்து முழுவதும் தேடினாலு மிதைப்போன்ற வளர்ப்பு மழகுமுள்ள நாயுனக் ககப்படுவது கஷ்டம்" என்றார். அதற்கந்த ஸ்திரீ உடனே தன் கைகளை நீட்டி யென்னை யழைத்தாள். எனக்கும் அந்த அம்மையினிடத்திற் செல்ல விருப்பமுண்டாகி யவளண்டைசென்று அவளுடைய உடுப்பின்மே லுட்கார்ந்தேன். அன்றுமுதல் இந்தப் புது எஜமானியால் வளர்க்கப்பட்டு வருகிறேன்; அவள் என் பேரில் அதிக அன்பு பாராட்டிவருகிறாள்."

மேலெழுதப்பட்ட சரித்திரத்தின் நாயகனான புருஸ் என்னும் நாய், அந்தப் புது எஜமானியிடம் பலநாளிருந்து கடைசியில் சில நாள் நோயாயிருந்து மாண்டதாம். அந்த நாயின் கதையினால் அது மிகவும் புத்திசாலியும் தன் எஜமானர்களிடத்தில் விஸ்வாசமுள்ளதுமா யிருந்ததாகத் தெரிகிறது. நாய் வர்க்கத்தில் அநேகம் அப்படி யிருக்கின்றன. அவைகள் நன்றாய் வளர்க்கப்பட்டு அன்பு பாராட்டப்பட்டால்நன்றாயிருக்கும். பேவா

ரீசாய்த் திரியும்படி விடப்பட்டால் சீக்கிரத்தில் அவைகளின் குணங்கள் கெட்டுப்போகின்றன.

உபாத்தியாயர்களுக்குச் சில குறிப்புகள்.

அன்போடு நடக்கும்படிக் கற்பிக்கப்படுகிற சிறுவர்கள் தாம் பெரியவர்களாகி நல்லயோசனையுடையவர்களாகும்பொழுது, அவர்களுடைய இனத்தார், கிராமத்தார், நாட்டாரெல்லாரும்சீர்ப்படுவதற்குக்காரணமாயிருப்பார்கள். அன்பு பொருந்தியிருப்பது சாமர்த்தியமின்மைக் கடையாளமென்று சிலர் எண்ணுகிறார்கள். அவ்வாறெண்ணுவது பிசகு. பலசாலிக ளநேகர் பலவீனமுள்ளவர்களிடத்தில் பட்சமாயிருப்பதை நாம் பார்க்கிறோம். பெருந்தன்மையுள்ளவர்களென்று சொல்லப்படுபவர்களில் பலர் சில தருணங்களில் கெட்டவர்களாகித் துர்க்கிருத்தியங்களைப் புரிவது முண்மையே. அப்படிப்பட்டவர்களை யொருபோதும் பெருந்தன்மை வாய்ந்தவர்களாக வெண்ணத்தகாது. அவர்கள் செய்யுங் கெட்ட காரியங்களினாலவர்களுக் கதுவரையிலிருந்த புகழ்ச்சி நாளுக்கு நாள் க்ஷீணித்துப்போகும். ஆகையால் பிராணிகளிடத்தில் தயையுட னிருக்க வேண்டுமென்று சிறுவர்களுக்குப் போதிக்கிறதற்குப்பெருந்தன்மையொருபோது மிடையூறாகமாட்டாது. பெருந்தன்மை யிருக்கும் சிறுவர்கள் நாய் பூனை முதலிய அற்ப ஜந்துக்களினிடத்தில் பட்சமுட னிருப்பார்கள். ஒருநாள் திக்கில்லாம லலைந்துகொண்டிருந்த ஒரு பூனையைப் பிடித்து அதை ஹிம்சித்துக்கொண்டிருந்த சில பெரிய பிள்ளைகளைப் பார்த்து ஒரு சிறுவன் அவ்வாறு ஊமைப் பிராணிகளை ஹிம்சிப்பது கெட்ட காரியமென்று அவர்களுக்கு வெகுவிதங்களில் போதித்து அப்பூனையை விடுவித்து அதைக் காப்பாற்றினான்.

சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்பொழுது நாநாவிதமான ஜந்துக்களைப்பற்றி யவர்களுக்குச் சொல்லி யவைகளினிடத்தில் காருண்ணியம் வாய்ந்திருப்பது நல்ல காரியமென்று போதிக்கவேண்டும். ஜீவகாருண்யம் பொருந்தியிருத்த லவசிய மென்பதைப்பற்றி யொருவர் ஒரு பத்திரிகையி லெழுதியிருக்கிறார்:—"எல்லா மிருகங்களிடத்திலும் அன்புண்டாகும்படிச் சிறுவர்களுக்கு வழக்கப்படுத்தி, நியாய அநியாயங்களுக்கு இன்னின்னவை காரணங்களா யிருக்கின்றனவென்று அவர்களுடைய மனதில் நன்றாய்ப் பதியும்படிச் செய்யாமல் உபேக்ஷையா யிருப்போமாயின், அவர்களுக்கு அன்பு அருள் முதலிய விஷயங்களை எளிதில் கற்பிக்கக் கூடிய பருவத்தை வீணாகக் கழித்தவர்களாவோம். சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டியவை இன்னின்ன விஷயங்களென்று உபாத்தியாயர்க ளெல்லாருக்குந் தெரிந்தேயிருக்கிறது. ஆயினும், அவர்களுக்குத் தெரிந்திருப்பதனால்மாத்திரம் பயனில்லை. அவைகளைப் பழக்கத்துக்குக் கொண்டுவரவேண்டிய முறைகளையும் அவர்களுக்கு உபாத்தியாயர்கள் தெரிவித்தால்தான் அவர்களும் அதிக விருப்பத்துடன் அவ்வாறு நடக்க முயல்வார்கள். பிராணிகளை ஹிம்சிக்க எவ்வளவு சுலபமாய்ச் சிறு பிள்ளைகளுக்குத் தெரிகிறதோ, அவ்வளவு சுலபமாய் நாமும் அவர்களுக்கு ஜீவகாருண்யத்தைப் போதிப்போமானால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் திருத்தமடைவார்கள்."

காட்டுமிருகங்களைப் பிடித்துவந்து பழக்கியவைகளை யாட்டுகிற சாலைகளுக்கும் மிருகக் காட்சிச் சாலைகளுக்கும் சிறுவர்களை யழைத்துச் செல்வதற்குமுன் அவர்கள் பிராணிகளிடத்தில் அன்புள்ளவர்களா யிருக்கிறார்களா வென்பதை உபாத்தியாயர்களும் தாய் தந்தையர்களும் கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால் அப்படிப்பட்ட விடங்களுக்குப் போகிற சிறுவர்கள் அங்கிருக்கும் மிருகங்களின்மீது கற்களை யெறியத் தலைப்படுவார்கள். மிருகங்களின் ஆட்டத்துக்குப் போய்வருகிற சில சிறுவர்கள் தங்களுக்கு அகப்பட்ட நாய் முதலிய சிறு பிராணிகளைத் தாங்களும் ஆட்டுவித்து அவைகளை ஹிம்சிப்ப துண்டு. ஒரு சிறுவன் ஒரு குதிரைப் பந்தயத்தைப் பார்த்துவந்து அன்றெல்லா முழைத்து அலுத்திருந்த ஒரு பலவீனமான குதிரையின் மேலேறி அதை யதட்டி யதட்டி ஓட்டினான். ஆகையால் ஜீவகாருண்ய மில்லாத சிறுவர்களை யப்படிப்பட்ட காட்சிகளுக்கு அனுப்பக்கூடாது.

ஒருகாலத்தில் சில சிறுவர்கள் ஒரு பூனைக் குட்டியைப் பிடித்து அதை ஹிம்சித்துக்

கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்வாறு ஹிம்சிப்பதை ஒரு சாளரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஓர் உத்தமி, உடனே ஓடிச் சென்று அச்சிறுவர்களைக் கடிந்து அந்தக் குட்டியைத் தான் எடுத்துக்கொண்டுபோய் வளர்த்து வந்தாள். இரண்டு மூன்று வாரங்கள் கழிந்த பிறகு, அவள் அந்தக் குட்டியை ஹிம்சித்த சிறுவர்களை யழைப்பித்து அதை யவர்களுக்குக் காண்பித்து இது இப்பொழுது எப்படியிருக்கிறது பாருங்களென்று சொன்னாள். அது அப்பொழுது நன்றாய்ப் பருத்து அதிக சுறுசுறுப்புட னிருந்தது. அதைப் பார்த்தவுடனே அவர்களுக் கதிக சந்தோஷ முண்டாயிற்று. அவர்கள் அன்று முதல் அவர்களுக்கிருந்த துர்ப்புத்தி நீங்கி முன் எவ்வளவு கெட்டவர்களா யிருந்தார்களோ அதைக்காட்டிலும் பலமடங்கு நன்மை பொருந்தி யிருந்தார்கள். இவ்வாறு நடத்திக்காட்டின ஒரு சிறு திருஷ்டாந்தமே அச்சிறுவர்களின் தீமையைப் போக்கி யவர்களை நல்ல பழக்கத்துக்குக் கொண்டுவந்த தென்பதை யுணர்த்தும் நல்ல புத்திமதிகளைச் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டிய சமயங்களை உபேக்ஷிக்கலாமா?

வாஷிங்டன் என்னு மூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் வாசித்துவந்த ஒரு சிறுவன் யாருக்கும் அடங்காமல் உபாத்தியாயருக்கு அதிகத் தொந்தரவு செய்துவந்தான். அந்த உபாத்தியாயர் அவனுக்கு நல்ல புத்திமதிகளைக் கற்பிக்கப் பல வுபாயங்கள் செய்து கடைசியில் மிருகங்களின் கதைகளை வாசிக்கும்படிச் செய்தார். அக்கதைகளில் மிருகங்கள் ஒன்றை யொன்று விசுவாசித்து வாழ்ந்து வந்த விருத்தாந்தங்களைப் படிக்கவே, அச்சிறுவன் தன் உபாத்தியாயரிடத்தில் அதிக அடக்கமுள்ளவனாயும் தன்னுடன் படித்து வந்த மற்றப் பிள்ளைகளிடத்தில் பட்சமுள்ளவனாயும் அவர்க ளெல்லாரைக்காட்டிலும் அதிக தருும சிந்தையுடையவனாயும் ஆகிவிட்டான். ஜீவகாருண்ய மதிக அவசியமான தென்பதையும் அதை யப்பியசிப்பதினாலுண்டாகிற மேம்பாட்டையு மவர்களுக்குப் போதிக்க இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்க ளநேகமுண்டு. அவைகளையெல்லாம் உபாத்தியாயர்கள் சிறுவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

சென்னைப் பஞ்சரப்போல்.

சென்னை ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்தார் ஜனங்களுக்குச் ஜீவகாருண்யத்தைப் போதிக்கும்பொருட்டு அநேகவிதமாய்ப் பிரயத்தனப்பட்டு வருகையில், சாதாரண ஜனங்கள் தங்களுடைய குதிரைகள் மாடுகள் முதலியவை கிழப்பருவமடைந்து வேலைசெய்ய முடியாதகாலத்தில் அவைகளைக் காப்பாற்றாமல் அவைகளின் சுகத்தைப்பற்றிக் கவலையு மற்றவர்களா யிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் ஏதாவது தகுந்த முயற்சி யெடுத்துக்கொண்டு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இச்சங்கத்தார் ஆலோசித்துக்கொண் டிருக்கையில் விஜயநகரத்து மஹாராணியவர்கள் அந்த ஏற்பாட்டுக்காக அவர்களுடைய சொந்தப் பணத்தினின்று உதவி புரிவதாகச் சொன்னார்கள். இன்னும் அதே காரியத்தி னிமித்தம் சதுர்புஜதாஸ் குசால்தாஸ் குமாரர்கள் அவர்களுக்குச் சொந்தமான 12 ஏகரா நிலத்தை இனாமாகக் கொடுத்தார்கள். இச்சத்காரியத்துக்காக நிலமேற்படவே விஜயநகரம் மஹாராஜ குமாரிகா சாஹிபா அவர்கள் ஒரு லக்ஷம் ரூபாய்களைத் தந்தார்கள். பிறகு சங்கத்தார் வெகு ஊக்கத்தோடு வேலைசெய்ய வாரம்பித்து 1906–ஸு டிசம்பர் மாதத்தில் கட்டடங்கட்ட வாரம்பித்து, அதற்கு நம்முடைய கவர்னராகிய மஹிமை பொருந்திய சர் ஆர்தர் லாலி துரையவர்கள் அஸ்திவாரக் கல்லை நட்டார். இந்த ஆசிரயத்திற்குப் பஞ்சரப்போல் என்று பெயரிட்டுப் பல கனவான்களுடைய உதவியினால் 1908–ஸு ஜனவரி மாசத்தி லிதைக் கட்டி முடித்தார்கள். இந்த ஆசிரயம் பெரம்பூர் பட்டாளத்திலிருந்து கொன்னூருக்குப் போகிற ஹைரோட்டி லிருக்கிறது. முதலில் இவ்வாசிரயத்திற்கு அதிக தொகையில்லாமற்போகவே சங்கத்தார் அநேக ராஜாக்கள், ஜமீன்தார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டிகள், ஜைனர்கள், குஜராத்தியர் முதலியவர்களைப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ள, அவர்களும் சகாயம் செய்தார்கள். இந்த ஆசிரயத்தில்வேலைசெய்ய முடியாத கிழ ஜந்துக்களுக்குத் தகுந்த உணவு கொடுத்து அவை சகஜமா யிறக்கும் வரையில் அவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதே இச்சங்கத்தாரின் நோக்கம். சென்னை ஜன ஸ்வே

தம்பரச் சங்கத்தார் அவர்களுக்குள் சந்தா போட்டுப் பணம் வசூல் செய்து பஞ்சராப் போலுக்குப் பக்கத்தில் ஒரு ஏகரா நிலத்தை வாங்கி, அதில் ஒரு மாட்டுக் கொட்டகையும் தண்ணீர்த் தொட்டியொன்றுங் கட்டி, பஞ்சரப்போல் கமிட்டியாருக்குக் கொடுத்துவிட்டார்கள். இந்தப் பஞ்சரப்போல் வேலையின் தொடக்கத்தில் ராவ் பஹதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ் அவர்கள் அதன் பண்டுக்காக 1,000 ரூபாய்களைக் கொடுத்தார்கள். லாட் கோவிந்ததாஸ் அவர்கள் மாட்டுக்கொட்டகை கட்டிக் கொடுத்தார். மோசஸ் கம்பெனியார் ஒரு தண்ணீர்த் தொட்டியைக் கட்டிக் கொடுத்தார்கள். இவ்வாறு பல பேர் பல விதங்களாக யுதவிபுரிந்து வருவதினால் இந்த நல்ல காரியம் நடந்தேறிவருகிறது. வேலை செய்யச் சக்தியற்ற ஜந்துக்களின் பாதுகாப்புக்காக ஏற்பட்டிருக்கு மிந்த ஆசிரயம் இந்த இராஜதானி முழுமைக்குமே ஏற்பட்டிருப்பதாலும், இம்மாதிரி ஆசிரயம் தென்னிந்தியாவில் இதுதான் முதலாவதாக இருப்பதினாலும், இப்பெருங் கைங்கரியம் யாதொரு குறைவின்றி நடந்தேறி வரும்பொருட்டுத் தருமாத்மாக்கள் பலரும் மிகுந்த பொருளுதவி செய்வார்களெனக் கோருகின்றோம்.

இந்த ஆசிரயத்தின் வேலைகளைச் சரிவர நடத்தும்பொருட்டு ஒரு கமிட்டி ஏற்பட்டு, அதற்கு ம-ா-ா-ஶ்ரீ, கன்ஷாம் சிங்கு அவர்கள் காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். முதலில் பொதுஜனங்களின் உதவி யதிகமாயில்லாமலிருந்தபோதிலும் வரவர, பஞ்சரப்போல் கமிட்டியார் கேட்காமலே யநேகர் சகாயம் செய்ய வாரம்பித்தார்கள். தற்காலத்தில் அதன் காரியங்கள் அநேக தனவான்களின் உதவியினால் நடந்துவருகின்றன.

இதற்கு முதலில் காரண கர்த்தர்களாயிருந்த விஜயநகரம் மஹாராஜ குமாரிகா சாஹிபா அவர்கள், நம்முடைய கவர்னரவர்கள், இப்பொழுது ஜீ. ஹி. நி. சங்கத்து அக்கிராசனாதிபதியாயிருக்கும் ஹைகோர்ட்டுப் பிரதம நீதியதிபதியாகிய கனம் பொருந்திய சர் சார்லஸ் ஆர்னால்ட் ஒயிட் துரையவர்கள், அதற்குமுன் அக்கிராசனாதிபதியாயிருந்த ஜட்ஜி பாடம் துரையவர்கள் முதலியவர்களின் மகத்தான தரும சிந்தையைக் கௌரவித்துப் பணக்காரர்களே யல்லாமல் எல்லாரும் முன்வந்து அவரவர்களின் சக்திக்குத் தக்கவாறு, பணமாகவாயினும் அல்லது வைக்கோல் புல் தானியம் முதலிய பொருள்களாக வாயினும் இவ்வாசிரயத்திற்குச் சகாயம் பண்ணும்படிப் பிரார்த்திக்கின்றோம்.

சமாசாரக் குறிப்புகள்.

1. **சென்னை ஜந்து விநோதக் காட்சி.**—சென்ற டிசம்பர்மீ 18உ சனிக்கிழமையன்று மதராஸ் ஜிம்கானா மைதானத்தில் மஹிமை பொருந்திய சர் ஆர்த்தர் லாலி துரையவர்கள் தம் பெருமாட்டியுடன் விஜயஞ்செய்து, அவர்களுடையவும் மற்றுமுள்ள பிரபுக்களுடையவும் சகாயத்தினால் ஜந்துக்களின் காட்சி யொன்று நடத்தப்பட்டது. அங்கே ஜீவகாருண்யத்துடன் நன்றாய் வளர்க்கப்பட்ட குதிரைகள், எருதுகள், பசுக்கள், பறவைகள் முதலிய ஜந்துக்களைக் கொண்டுவந்து காட்டினவர்களுக்கும், பந்தயங்களில் ஜெயித்தவர்களுக்கும் வெகுமதிகளளிக்கப்பட்டன. இந்தத் தடவை முன் தடவைகளைக் காட்டிலும் அதிகமாய் அநேக கனவான்கள் வந்திருந்ததினால் காட்சி வெகு நன்றாய் நடத்தப்பட்டது.

2. **மைசூர் விநோதக் காட்சி.**—சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் மைசூர் சமஸ்தானத்தில் தசரா பண்டிகை கொண்டாடப்பட்ட சமயத்தில், புஷ்பங்கள், கால்நடைகள், பக்ஷிகள் முதலியவைகளின் விநோதக் காட்சியும் நடத்தினார்கள். அக்காட்சிக்கு மைசூர் மஹாராஜா அவர்கள் பல இராஜாங்கத்து உத்தியோகஸ்தர்களுடன் விஜயஞ்செய்து, அங்கு கொண்டுவரப்பட்ட நேர்த்தியான பறவைகளையும் புஷ்டியான கால்நடைகளையும் பார்த்து அதிக சந்தோஷமடைந்தார். அங்கு கொண்டுவரப்பட்ட கால்நடைகளில் அரண்மனையைச் சேர்ந்தவை சில போக, மற்றவை பெரும்பாலும் வெளித் தாலூக்காக்களிலுள்ள குடியானவர்களுக்குச் சொந்தமானவையாம்.

3. **ஏ. ஸி. புல்மூர் துரை.**—சென்னையில் கோழி முதலிய பறவைகளை நன்றாய் வளர்ப்

பதில் பேர் வாய்ந்த ஏ. வி. புல்மூர் துரையவர்கள் பறவைகளைக் குறித்து ஒரு புஸ்தகமெழுதியிருக்கிறார். அதில், கோழிகளை நன்றாய் வளர்ப்பதற்கு வேண்டிய உபாயங்களையும் அவைகளுக்கு உண்டாகிற வியாதிகளையும் சிகிச்சைகளையும்பற்றி நன்றாய்ச் சொல்லப்பட் டிருக்கிறது. புதிதாய்ப் பறவைகளை வளர்க்க ஆரம்பிக்கிறவர்கள் அப்புஸ்தகத்திலிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

---

4. **அமெரிக்காவில் மாரிகாலம்.**—அமெரிக்காவின் வடமேற்கு ஜில்லாக்களில் மாரிகாலத்தில் கால்நடைகளுக் குண்டாகிற துன்பங்களைக்கேட்க அதிக விசனமாயிருக்கிறது. கடந்த மாரிகாலத்தில் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உணவில்லாமலும் குளிரின் மிகுதியினாலும் மாண்டுபோயினவாம். சில மந்தைகளுக் குண வில்லாததினால் அவைகளே உணவைத் தேடிக்கொள்ளும்படி ஏதேச்சையாய் விட்டுவிடப்பட்டன. அவைகளுக்குக் குடிக்கவும் நீரின்றிப் பனிக்கட்டிகளைத் தின்று தாகத்தைச் சிறிது தணித்துக்கொண்டனவாம். பனிக்கட்டி 4 அல்லது 5 அடி உயரத்திற்கு உறைந்து கிடப்பதனால் புல் அகப்படுவதே யில்லை. பலநாள்வரையிலும் ஒரேவிதமாய்க் குளிர்ந்த காற்றடிப்பதனால் அப்பிராணிகளின் இரத்தங்கூட உறைந்து விடுகிறது. இக்கொடுமையினின்றும் 100-ல் 20 பிராணிகள்கூடத் தப்பிப் பிழைப்பது அரிதாயிருக்கிறது. இந்த திக்கற்ற மிருகங்களின் துன்பத்தை நீக்கத்தகுந்த உபாயம் யார் கண்டுபிடிப்பார்களோ அறியோம்?

---

5. **ஓர் குதிரையின் விசுவாசம்.**—சில நாள்களுக்குமுன், உல்வராம்ப்டன் என்னும் பட்டணத்துக்கடுத்த ஒரு கிராமத்தில் வண்டியோட்டுகிறவ னொருவன் இறந்துபோனான். அவனுடைய பிணத்தைப் புதைப்பதற்காகக் கொண்டுபோனபோது, ஜானு வென்கிற அவனுடைய குதிரை பிணத்தின் பின்னாலேயே சென்று தன் எஜமானனைப் புதைக்கிறவரையி லிருந்துவிட்டுத் திரும்பினதாம். அதைப் பார்த்தவர்க ளெல்லாரு மதியாச்சரிய மடைந்தார்கள்.

---

6. **குதிரைகளின் தேய்ப்பு.**—குதிரைகள் நல்ல தேகஸ்திதியி லிருப்பதற்கு அவைகளுக்குத் தேய்ப்பு அவசியமானது. தேய்ப்பு இல்லாவிட்டால் வியர்க்கும்பொழுது வெளிவருகிற அழுக்கு தோலிலேயே தங்கி, நமைச்சல், சொறி, கொப்புளங்கள் முதலிய பலவித நோய்க ளுண்டாகும். நல்ல பன்றி மயிரால் செய்யப்பட்ட ஒரு தூரிகை கொண்டு தேய்த்தால் குதிரைகளின் தோல் மெதுவாகிறதுடன், அங்கே உலர்ந்துகிடக்கிற அழுக்கெல்லாம் உதிர்ந்துவிடும். மேலும், தேய்ப்பினால் இரத்தம் தேகத்தில் நன்றாய்ப் பாவி, நரம்புகளும் உரோமத் துவாரங்களும் அவைகளின் வேலையை நன்றாய்ச் செய்யும். மேற்சொன்னபடி இரத்தம் பாவச் செய்வதற்குக் குதிரைகள் வேலை செய்தபிறகு அவைகளைத் தேய்ப்பது மிகவும் நலம்.

---

7. **எருதுகளின் சண்டை.**—சில நாள்களுக்குமுன் போர்ச்சுகல் தேசத்தில் ஒரு பட்டணத்தில் எருதுச்சண்டை யொன்று நடத்தினார்கள். அந்த எருதுகளி லொன்று மிரண்டு ஓடத் தலைப்பட்டு, சுற்றிப்போட்டிருந்த கிராதியைத் தாண்டி, சண்டையைப் பார்க்கவந்திருந்த ஜனங்களின்மேல் பாய்ந்தோடிற்று. அதனால் சுமார் நாற்பது ஜனங்களுக்கு அதிக காயங்கள் பட்டனவாம். இப்படிப்பட்ட அபாயகரமான ஆட்டங்களை, மிகுந்த நாகரிக மடைந்ததாகச் சொல்லிக் கொள்ளுகிற அந்த நாட்டார் எப்பொழுது நிறுத்திவிடுவார்களோ தெரியவில்லை?

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1911.